நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 நாகப்பட்டினம்

வழக்கு எண்: CC 588/2021

வழக்கு சாட்சி : PW 1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஆனந்தராஜ் | தொழில் | : |
| தந்தை பெயர் | : ரெங்கராஜ் | சமயம் | : |
| கிராமம் | : | வயது | : 63/ 2025 |
| தாலுக்கா | : | | |

Solemnly affirmed in accordance with the provision of Oaths Act, 1969 (Act 44 of 1969), of the day of **20.08.2025**

(1 வது எதிரி ஆஜர். 2 வது எதிரி ஆஜர் இல்லை. இரண்டாம் எதிரி சார்பில் பிரிவு 355 BNSS தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**மனுவின் பேரில் குறுக்கு விசாரணை :**

நான் இவ்வழக்கின் 3 எதிரிகளுக்கு எதிராக புகார் கொடுத்துள்ளேன். இந்த வழக்கு சம்பவம் குறித்து நாகப்பட்டினம் மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.10/2021 தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கில் 1,2 எதிரிகள் எனக்கு ரூ. 12,50,000 கொடுக்க வேண்டும் என்று கோரியுள்ளேன். மேற்படி வழக்கில் 3 வது எதிரியை பிரதிவாதியாக சேர்க்கவில்லை என்றால் சரி. 1,2 எதிரிகள் ஊரை காலி செய்து கொண்டு செல்லிவிருந்ததால் அவர்களுக்கு எதிராக மட்டும் மேற்படி சிவில் வழக்கு தாக்கல் செய்தேன். வழக்கு சம்பவத்திற்கும் 3 வது எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்ற காரணத்தால் தான் மேற்படி 3 வது எதிரியை மேற்படி சிவில் வழக்கில் பிரதிவாதியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. 3 வது எதிரியிடம் இருந்து வழக்கு சம்பந்தமாக ஏதேனும் ஆவணங்களை நான் பெற்றேனா என்றால் இல்லை.

நான் பணம் வைப்பீடு செய்ததாக சொல்லப்படும் 2016 ம் ஆண்டுக்கு முன்னர் இவ்வழக்கின் எதிரிகளை யார் என்றே எனக்கு தெரியாது என்றால் சரி. செய்தித்தாளுடன் வந்த துண்டு பிரசுர விளம்பரத்தை கண்டு society ல் பணம் வைப்பீடு செய்ய சென்றேன் என்றால் சரி. மேற்படி துண்டு பிரசுர விளம்பரத்தில் மேற்படி society மத்திய மாநில அரசால் அங்கீகரிக்கபப்பட்ட society என்று கண்டுள்ளது என்றால்

சரியல்ல. மேற்படி துண்டு பிரசுர விளம்பரம் என்னிடம் இல்லை. மேற்படி துண்டு பிரசுர விளம்பரத்தில் The prompt multistate cooperative private limited housing unit என்று இருந்தது.

மேற்படி நிறுவனம் அரசாங்கத்தால் அனுமதி அளிக்கப்பட்ட நிறுவனமா என்பதை நான் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. எனக்கு அந்த அளவுக்கு படிப்பறிவு இல்லை. மேற்படி நிறுவனம் மத்திய அரசால் அனுமதி அளிக்கப்பட்ட நிறுவனம் என்றும், அதன் தலைமை அலுவலகம் கோயம்புத்தூரில் உள்ளது என்றும் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரியல்ல. நான் மேற்படி நிறுவனத்திற்கு சென்ற போது அங்கு 10,15 நபர்கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள் என்றால் சரியல்ல. நான் சென்ற போது இவ்வழக்கின் 3 எதிரிகள் மற்றும் எதிரி பாலசுப்பிரமணியனின் உறவினர் ஜெயசுதா என்பவர் இருந்தார். மேற்படி ஜெயசுதா என்பவருக்கு எதிராக நான புகார் கொடுக்கவில்லை. அவர் அங்கு வேலைவ செய்து வ்நததால் புகார் கொடுக்கவில்லை. இவ்வழக்கின் 3 எதிரிகள் தான் மேற்படி நிறுவனத்தின் உரிமையாளர்கள் என காட்ட ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை.

இவ்வழக்கின் 2,3 எதிரிகள் மேற்படி நிறுவனத்திற்கு சம்பந்தமே இல்லாத நபர்கள் என்றால் சரியல்ல. 1வது எதிரி மேற்படி நிறவனத்தால் நேர்முகத்தேர்வில் தெரிவு செய்யப்பட்டு, அவர் ரூ. 3 லட்சம் வைப்பீடு தொகை செலுத்திய பிறகு அந்த நிறுவனத்தின் செயலாளராக நியமிக்கப்பட்டார் என்றால் சரியல்ல. இந்த 1வது எதிரியை போலவே மேற்படி நிறுவனத்தால் மேலும் 6 நபர்கள் தெரிவு செய்யப்பட்டு மேற்படி நிறுவனத்தின் சம்பவ சமயத்தில் பணியில் இருந்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி 6 நபர்கள் பற்றி நன்கு தெரிந்தும் அவர்களை விட்டு விட்டு மேற்படி நிறுவனத்திற்கு சம்பந்தமே இல்லாத இவ்வழக்கின் 2,3 எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

1வது எதிரி மேற்படி நிறவனத்தால் நேர்முகத்தேர்வில் தெரிவு செய்யப்பட்டு, அவரிடம் இருந்து ரூ. 3 லட்சம் வைப்பீடு தொகை பெற்றுக் கொண்டு பணியமர்த்திவிட்டு மேற்படி நிறுவனத்தின் முன் அறிவிப்பின்றி மூடிவிட்டு தன்னை போல் நிறைய நபர்களிடம இருந்து மேற்படி வைப்பீடு பெற்றுக் கொண்டு மேற்படி நிறுவனம் ஏமாற்றி விட்டதாக கோயம்புத்தூரில் புகார் கொடுத்துள்ளார் மற்றும்

முதலமைச்சர் தனிப்பிரிவில் புகார் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

நான கட்டிய பணத்திற்கு கொடுக்கப்பட்ட ரசீதுகள் அனைத்தும் 1வது எதிரியால் கொடுக்கப்பட்டது என்றால் சரி. 2வது எதிரி எனக்கு ஒரு share certificate கொடுத்தார். எனக்கு கொடுத்த share certificate ல் உள்ள அந்த share ன் மதிப்பு என்ன என்றால் எனக்கு தெரியாது. அந்த share certificate ன் மதிப்பு என்ன என்றால் எனக்கு தெரியாது.

எதிரிகள் தான் என்னிடம் பணத்தை வைப்பீடு செய்ய சொல்லி சொன்னார்கள் என்று பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது புகார், போலீசார் விசாரணையில் இராமலிங்க அடிகளார் மடத்திற்கு சென்ற போது எதிரிகள் என்னிடம் பணத்தை வைப்பீடு செய்ய சொல்லி சொன்னார்கள் என்று நான் எதுவும் சொல்லவில்லை என்றால் சரி. இராமலிங்க அடிகளார் மடத்திற்கு சென்ற போது எதிரிகள் என்னிடம் பணத்தை வைப்பீடு செய்ய சொல்லி சொன்னார்கள் என்று பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

போலீசில் புகார் கொடுப்பதற்கு முன்னர் வழக்கறிஞரை கலந்து ஆலோசித்த பிறகு புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. வழக்கறிஞரை கலந்து ஆலோசித்த பிறகு தான் நான் நேரடியாக காவல கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. மேற்படி சட்ட அறிவின் பேரில் 1 எதிரி மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களான 2,3 எதிரிகளுக்கு எதிராகவும் புகார் கொடுத்துள்ளேன் எனறால் சரியல்ல. 2வது எதிரி எனக்கு கொடுத்ததாக சொல்லப்படும் share certificate ஐ நானே தயார் செய்து வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் எனறால் சரியல்ல. நான் 30.11.2020 ம் தேதியில் புகார் கொடுத்தேன். பின்னர் காவல கண்காணிப்பாளர் அலுவலகத்தில் எதிரிகளிடம் கையொப்பம் பெற்று அதனை வழக்கு ஆவணங்களுடன் ஒப்பீடு பார்த்தார்கள். எந்த தேதியில் மேற்படி எதிரிகளிம் கையொப்பம் பெறப்பட்டது என்றால் நினைவு இல்லை.

10 மாதங்கள் மட்டும் தான் நாகப்பட்டினத்தில் மேற்படி நிறுவனத்தின் கிளை செயல்பட்டது என்றும், 1வது எதரி உட்பட பல கிளைகளில் வேலை செய்யபும் நபர்களை மேற்படி நிறுவனம் ஏமாற்றி விட்டது என்றும், இது சம்பந்தமாக 1வது எதிரி மேற்படி நிறவனத்திற்கு எதிராக புகார் கொடுத்துள்ளார் என் றும், இந்த விபரங்கள்

தெரிந்து கொண்டே இந்த பொய்யான புகாரினை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல . இந்த நிறுவனத்தின தலைமையகம் கோயம்புத்தூரில் உள்ளது என கேள்விபட்டு அங்கு சென்று பார்த்தேன் என்றால் சரி. 2020 செப்டம்பர் மாதம் அவ்வாறு சென்றேன். அங்கு சென்ற பார்த்த போது மேற்படி நிறுவனம் அந்த முகவரியில் இல்லை. 2,3 எதிரிகளுக்கும் மேற்படி நிறுவனத்திற்கும் சம்பந்தம் இல்ை என்றும், 1வது எதிரி மேற்படி நிறுவனத்தின் பணியாளர் மட்டும் தான் என்றும் சொன்னால் சரியல்ல. 3 எதிரிகளும் என்னை நேரடியாக பார்த்ததே இல்லை என்றும், இந்த எதிரிகள் மீது புகார் கொடுத்தால் எனக்கு பணம் கிடைக்கும என்ற அடிப்படையில் பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. அதனால் தான் நான் தாக்கல் செய்த சிவில் வழக்கில் 3 வது எதிரியை பிரதிவாதியாக சேர்க்காமல் விட்டுவிட்டேன் என்றால் சரியல்ல.

2020 ல் நானும், எனது மனைவியும் வீரமணி என்ற ரவுடியை அழைத்த கொண்டு வீட்டில் சென்று பணம் கேட்டு மிரட்டியதாக 1வது எதிரி என் மீது புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 1வது எதிரியின் வீடு வடக்குபொய்கைநல்லூரில் உள்ளது என்றால் சரி. அவர் MBA படித்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1வது எதிரியும் என்னை போல் பாதிக்கப்பட்ட நபர் என்றும், அவர் மீது புகார் கொடுத்தால் எனக்கு பணம் கிடைக்கும என்ற அடிப்படையில் பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. இவ்வழக்கின் அடிப்படை சிவில் வழக்கு ஆகும், குற்றவியல் நீதிமனற்த்தில் இது போன்ற வழக்கை தாக்கல் செய்ய முடியாது என்றும் சொன்னால் சரியல்ல.